**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 21.01.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 20.01.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

( 1 ) இந்நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 –இல், நாமக்கல் சாலை முதல் காட்டுர் வரை, காளியம்மன் கோவில் தெரு, விநாயகம் தெரு, செட்டியண்ணன் தெரு, வி. நகர் சாலை 6 & 7 ஆகிய பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் பழனி தெரு மற்றும் மாதா கோவில் தெருவில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ. 2.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20557/2020/இ3 நாள் 15.12.2020–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ள 11.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி அஞ்சல், இராசிபுரம் | ரூ. 2.00 கோடி | – | 4.95% |
| 2 | திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி அஞ்சல், இராசிபுரம் | | – | 5.59 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும் பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–இல் உள்ள திரு ஆர். பிரகாசம், வ.எண். 2–இல் உள்ள திரு ஆர். பெரியசாமி ஒப்பந்ததாரரை விட குறைவாக அளித்துள்ளதால், மேற்படியாரிடம் விலைப்புள்ளி குறைத்துத்தர கடிதம் மூலம் கோரப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர், பணியாட்களது கூலி உயர்வு மற்றும் கட்டுமான பொருட்கள் விலையேற்றம் காரணமாக விலைப்புள்ளி குறைத்துத்தர இயலாதென 20.01.2021 அன்று கடிதம் வழங்கியுள்ளார். இதனை அடுத்து பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் வ.எண். 1–இல் உள்ள ஒப்பந்ததாரரான திரு ஆர். பிரகாசம் அவர்கள் கூடுதலாக அளித்துள்ள 4.95% ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் பணியின் அவசர அவசியம் கருதி திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைவிட 4.95 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/20/இ1)

**தீர்மானம் எண். 937**

அனுமதிக்கப்பட்டது.

( 2 ) இந்நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 –இல், கோனேரிபட்டி எக்ஸ்.2, காமராஜ் காலனி, காந்தி நகர் சாலை, ராம்நகர் சாலை, இராமதீர்த்தம் சந்து, பிற்பட்டோர் காலனி சாலை, இந்திரா காலனி, வி. நகர் சாலை எண். 4 ஆகியப் பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் கண்டி வெங்கட்ராம தெரு, கோபால் தெரு, தினசரி மார்கெட் குரங்காட்டி தெரு, திருவேங்கடவிலாஸ் சந்தில் கான்கிரீட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ. 2.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20557/2020/இ3 நாள் 15.12.2020–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ள 11.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | PM Infra. ஒப்பந்ததாரர், பாப்பிநாயக்கன்பட்டி, நாமக்கல். | ரூ. 2.00 கோடி | – | 4.94% |
| 2 | திரு கே. வீரப்பன், ஒப்பந்ததாரர், சேந்தமங்கலம், நாமக்கல். | | – | 9.98 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1–இல் உள்ள PM Infra ஒப்பந்ததாரர், வ.எண். 2–இல் உள்ள திரு கே. வீரப்பன் ஒப்பந்ததாரை விட குறைவாக அளித்துள்ளதால், மேற்படியாரிடம் விலைப்புள்ளி குறைத்துத்தர கடிதம் மூலம் கோரப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் பணியாட்களது கூலி உயர்வு மற்றும் கட்டுமான பொருட்கள் விலையேற்றம் காரணமாக விலைப்புள்ளி குறைத்துத்தர இயலாதென 20.01.2021 அன்று கடிதம் வழங்கியுள்ளார். இதனை அடுத்து பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் வ.எண். 1–இல் உள்ள ஒப்பந்ததாரரான PM Infra அவர்கள் கூடுதலாக அளித்துள்ள 4.94 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் பணியின் அவசர அவசியம் கருதி PM Infra ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைவிட 4.94 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/20/இ1)

**தீர்மானம் எண். 938**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இந்நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21 –இல், மேற்கு காலனி, வள்ளலார் சாலை, எல்லப்பா தெரு 3, வரதராஜுலு தெரு, திரு.வி.க தெரு, நெசவாளர் காலனி சாலை, மாரப்பன் தோட்டம் E.B. சாலை, காதர் தெரு ஆகியப் பகுதிகளுக்கு தார்சாலை மற்றும் சந்துவீரி தெரு, காதர் தெரு மேற்கு, சிக்கா தெரு, அங்காளம்மன் கோவில் – அண்ணாசாலை சந்து கான்கிரீட் சாலை அமைத்தல் பணிக்கு ரூ. 2.00 கோடி மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20557/2020/இ3 நாள் 15.12.2020–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து

மேற்படி பணி மேற்கொள்ள 11.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு. டி. எஸ். செந்தில்குமார், ஒப்பந்ததாரர், துத்திக்குளம், சேந்தமங்கலம், நாமக்கல் | ரூ. 2.00 கோடி | – | 9.02 % |
| 2 | ஸ்ரீ கன்ஷ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், மெயின்ரோடு, சேந்தமங்கலம், நாமக்கல் | | – | 4.99 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 2–இல் உள்ள ஸ்ரீ கன்ஷ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், வ.எண். 1–இல் உள்ள திரு. டி. எஸ். செந்தில்குமார், ஒப்பந்ததாரைவிட குறைவாக அளித்துள்ளதால் மேற்படியாரிடம் விலைப்புள்ளி குறைத்துத்தர கடிதம் மூலம் கோரப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர், பணியாட்களது கூலி உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்கள் விலையேற்றம் காரணமாக விலைப்புள்ளி குறைத்துத்தர இயலாதென ஸ்ரீ கன்ஷ்ட்ரக்சன், அவர்கள்20.01.2021 அன்று கடிதம் வழங்கியுள்ளார். இதனை அடுத்து பொறியாளர் கையேடு பக்கம் எண். 9–இல் பிரிவு 2.7.2.–இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டியுள்ளதால் வ.எண். 2–இல் உள்ள ஒப்பந்ததாரரான ஸ்ரீ கன்ஷ்ட்ரக்சன் கூடுதலாக அளித்துள்ள 4.99 % ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் பணியின் அவசர அவசியம் கருதி ஸ்ரீ கன்ஷ்ட்ரக்சன் மதிப்பீட்டைவிட 4.99 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/20/இ1)

**தீர்மானம் எண். 939**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) தமிழக அரசின் ஊரக பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் (SuWaseM) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவை அதிகரிக்க மழைநீர் சேகரிப்பு அமைக்கும் திட்டப் பணிகளுக்கான முன்மொழிவுகளை அனுப்பக் கோரி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தெரிவிக்கப்பட்டது. அப்பணிகளுக்கான செலவினம் 50% ‘‘சுவாசம்‘‘ திட்டத்திலிருந்தும் 50% நகராட்சி நிதியிலிருந்தும் மேற்கொள்ள அரசாணை எண். 102, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ1) துறையின்கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் மழைநீர் சேகரிக்கும் அமைப்பினை ஏற்படுத்தி மூலைக்கிணற்றின் நீர்மட்டத்தினை உயர்த்தும் பணிக்கு ரூ. 9.90 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேலாண்மை பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 280416/Hg wing/DLC/SuWaseM/2018(vol.II), நாள் 26.12.2020–இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியை ரூ. 9.90 இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் 50% செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(118/19/இ2)**

**தீர்மானம் எண். 940**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள SHARP பிரிண்டர் இயந்திரத்தின் Developer kit மாற்றம் செய்யவும், SHARP MX – M464N – PCL6 இரண்டு டோனர்கள் வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. **50000/–**ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அலுவலகப் பணிகளின் அத்தியாவசியத்தினைக் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்ட விவரங்கள் வருமாறு.

1) Spyder Technology, 153, PMC Plaza, Suramangalam Main Road, Salem-5 – Rs. 46300/-
2) Digi Print Services, 24, Siva Complex. Vincent, Salem – 7 - Rs. 51000/-
3) Chandra Hi Tech, 209, Periyar Nagar, Erode - Rs. 52000/-

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Spyder Technology நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. **50000/–** உத்தேச செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வழங்கலாம்.

**(80/21/இ1)**

**தீர்மானம் எண். 941**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி தெரு விளக்கு பராமரிப்பில் உபயோகப்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்த இயலாத நிலையிலுள்ள கீழ்காணும் பொருட்கள் உள்ளன.

1) 40 வாட்ஸ் காப்பர் சோக்கு – 500 எண்ணிக்கை
2) 70 வாட்ஸ் சோடியம் சோக்கு – 50 எண்ணிக்கை
3) 150 வாட்ஸ் சோடியம் சோக்கு – 50 எண்ணிக்கை
4) 40 வாட்ஸ் குழல் விளக்கு பிட்டிங்ஸ் – 80 எண்ணிக்கை
5) 70 வாட்ஸ் சோடியம் பிட்டிங்ஸ் – 25 எண்ணிக்கை
6) 150 வாட்ஸ் சோடியம் பிட்டிங்ஸ் – 40 எண்ணிக்கை
7) 40 வாட்ஸ் குழல் விளக்குகள் – 800 எண்ணிக்கை
8) 70 வாட்ஸ் சோடியம் பல்பு – 25 எண்ணிக்கை
9) 150 வாட்ஸ் சோடியம் பல்பு – 100 எண்ணிக்கை

மேற்காணும் பொருட்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(233/21/இ1)

**தீர்மானம் எண். 942**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–இன் கீழ் ரூ. 600.00 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று சிப்பங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் மாநில அளவில் கீழ்கண்டுள்ளவாறு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) தினமலர் (தமிழ்) | ரூ. 61100/– |
| 2) தி இந்த (ஆங்கிலம்) | ரூ. 99200/– |
| | 160300/– |
| மாநில சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | ரூ. 4007.50 |
| மத்திய சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | ரூ. 4007.50 |
| | ரூ. 168315/– |

விளம்பரக் கட்டணம் ரூ. 168315/– Flame Advertising Company Private Ltd. நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 168315/– Flame Advertising Company Private Ltd. சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4267/20/இ1)

**தீர்மானம் எண். 943**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் 10 (பத்து) BOV வாகனங்கள் பழுது ஏற்பட்டும், Battery Charge இல்லாத காரணத்தினாலும் இயங்காமல் உள்ளது. எனவே, மேற்படி 10 (பத்து) BOV வாகனங்களுக்கு புதிய பேட்டரி பொருத்தியும், பழுதுகளை சரி செய்தும் வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(858/21/எச்1)

**தீர்மானம் எண். 944**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சி பாச்சி தெருவில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறு நீண்டகாலமாக உபயோகமற்று பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளது. தற்காலிகமாக அடிபம்பை கழற்றி ஆழ்துளைக் கிணற்றினை போர் கேப் கொண்டு மூடி சமன் செய்து போக்குவரத்தினை சீர் செய்யலாம். ஆழ்துளைக் கிணறு பயன்பாட்டிற்கு

தேவைப்படும்போது மோட்டார் வைத்து எடுத்துக் கொள்ளலாம். அதன்படி தற்சமயம் அடிபம்பினை அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(5392/20/இ2)

**தீர்மானம் எண். 945**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சி TN 28 Q 8402 ஈப்பு வாகனம் செல்ப் மோட்டார் பழுது சரிசெய்யும் பணிக்கு **11.1.2021** அன்று வெளியிட்ட விலைப்புள்ளி அறிவிப்பின்படி **13.1.2021** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| வ.எண். | விநியோகஸ்தர் பெயர் & முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | அஷ்வாக் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ், குமாரசாமி தெரு, இராசிபுரம் | ரூ. 4050/– |
| 2 | ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ் & பேட்டரீஸ், ஜாகீர் உசேன் சாலை, இராசிபுரம். | ரூ. 3800/– |
| 3 | செல்வம் பேட்டரி ஒர்க்ஸ், சேலம் ரோடு, இராசிபுரம் | ரூ. 4650/– |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி (ரூ. 3800/–) அளித்துள்ள ஆண்டவர் ஆட்டோ எலக்ட்ரிகல்ஸ் & பேட்டரீஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(115/21/இ2)

**தீர்மானம் எண். 946**

அனுமதிக்கப்பட்டது.

( 11 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9706–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(12/21/எச்1)

**தீர்மானம் எண். 947**

அனுமதிக்கப்பட்டது.

( 12 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9274–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(13/21/எச்1)**

**தீர்மானம் எண். 948**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9646–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1.30 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(5346/20/எச்1)**

**தீர்மானம் எண். 949**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 1 முதல் 13 வரையுள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் மூலம் வழங்கும் உபரி நீர் மற்றும் திறந்தவெளிக் கிணற்றிலிருந்து பொது மக்களுக்கு வழங்கும் உபரி நீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்ய பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள வருடாந்திர அடிப்படையில் 2021–22–ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ. 9.00 இலட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(629/21/இ2)**

**தீர்மானம் எண். 950**

அனுமதிக்கப்பட்டது.

( 15 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 26 காட்டூர் காட்டுக்கொட்டாய் கலைவாணி நகர் பகுதியிலுள்ள சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பிளாட்பாரம் முழுவதும் பழுதடைந்து தண்ணீர் பிடிக்க ஏதுவாக இல்லை. புதியதாக பைப் லைன் அமைத்து உப்புநீர் வசதி செய்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 120000– மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(627/21/இ2)**

**தீர்மானம் எண். 951**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் மூலம் வழங்கும் உபரி நீர் மற்றும் திறந்தவெளிக் கிணற்றிலிருந்து பொது மக்களுக்கு வழங்கும் உபரி நீர் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்ய பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் வருடாந்திர அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ள 2021–22–ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ. 9.00 இலட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(628/21/இ2)

**தீர்மானம் எண். 952**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.